# தினத்தளம்

PRGI NO: TNBIL/25/A3556

நடுநிலை நாளிதழ்

www.dhinathdhalam.com

ஆசிரியர் : முனைவர். எஸ்.மோகன்ராஜ் M.A.,PGDJMC.,Ph.D., DHINATH DHALAM Tamil & English daily Paper நிர்வாக ஆசிரியர் : முனைவர். எம்.ஹரிகிருஷ்ணன் B.A.,

மலர் Volume : 01 | இதழ் Issue : 113 | செவ்வாய்க்கிழமை Tuesday | 21.07.2026 | பக்கங்கள் Pages:4 | ₹ 6 | ஈரோடு Erode


# முதலமைச்சர் விஜயுடன் போர்டு நிறுவனத்தின் உயர்மட்டக் குழுவினர் சந்திப்பு



தமிழ்நாடு அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது:- முதல்அமைச்சர் விஜய்யை இன்று (20.7.2026) தலைமைச் செயலகத்தில், அமெரிக்க நாட்டைச் சேர்ந்த உலகப் புகழ்பெற்றகார் உற்பத்தி நிறுவனமான போர்டு நிறுவனத்தின் துணைத் தலைவர் மேத்யூ கோட்லெவ்ஸ்கி (Thiru. Mathew Godleweski) தலைமையிலான உயர்மட்டக் குழுவினர் சந்தித்துப் பேசினர். இந்தச் சந்திப்பின்போது, இந்நிறுவனம், தமிழ்நாட்டில் தனது உற்பத்தி திட்டத்தைமீண்டும்தொடங்குவது பற்றியும், தற்போது நிறுவியுள்ள உலகளாவிய திறன் மையங்கள் விரிவாக்கம் தொடர்பாகவும், இனிவரும் காலங்களில், உற்பத்தித் துறையில் மேற்கொள்ளப்படவுள்ள விரிவாக்க திட்டங்கள் குறித்தும் விரிவான ஆலோசனை மேற்கொள்ளப்பட்டது. போர்டு நிறுவனம், சென்னையில், ஒரு மிகப்பெரிய உலகளாவிய திறன் மையம் ஒன்றினை செயல்படுத்தி வருகிறது. 12,000 தொழில்நுட்ப வேலைவாய்ப்புகள் உருவாக்கப்பட்டுள்ளது. மேலும், சமீபத்தில்தான், இந்நிறுவனம், கோயம்புத்தூரில் ஒரு உலகளாவிய திறன் மையம் நிறுவியுள்ளது. அதுமட்டுமின்றி, தற்போது உள்ளமறைமலை நகர் உற்பத்திச் சாலையில், 3250 கோடி ரூபாய் முதலீடு மற்றும் 600 நபர்களுக்கு வேலைவாய்ப்பு என்ற வகையில், இன்ஜின்கள் உற்பத்தி தொடங்க உள்ளது. இச்சந்திப்பின்போது, போர்டு நிறுவனத்திற்கும் தமிழ்நாட்டிற்கும் இடையேயான 30 வருட உறவை நினைவுகூர்ந்த முதல்-அமைச்சர், விரைவில் இந்நிறுவனம் மேற்கொள்ளப்பட உள்ள உற்பத்தித் திட்டத்திற்கு அனைத்து ஒத்துழைப்பையும் அரசு வழங்கும் என்று முதல்அமைச்சர் உறுதியளித்தார்கள். மேலும், மறைமலைநகர் உற்பத்திச் சாலையை முழு அளவிற்கும்பயன்படுத்திடும் வகையில், போர்டு நிறுவனம், மீண்டும் தனது உற்பத்தியையும், விரிவாக்க திட்டங்களையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் முதல்அமைச்சர் கேட்டுக் கொண்டார்கள்.தொழில் துறை அமைச்சர் எஸ். கீர்த்தனா,தொழில்,முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர் ச. விஜயகுமார், ஐ.ஏ.எஸ்., வழிகாட்டி நிறுவனத்தின் மேலாண்மை இயக்குநர் மற்றும் தலைமைச் செயல் அலுவலர் தீபக் ஜேக்கப், ஐ.ஏ.எஸ்., போர்டு நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் சிமோனெட்டா வெர்டி (Ms. Simonetta Verdi), போர்டு இந்தியா பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் உற்பத்திப் பிரிவு இயக்குநர் தீரஜ் தீக்ஷித், Country Directorமுனைவர்ஸ்ரீபாத் பட், இயக்குநர் வி. ராஜா விமல குமார் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவ்வாறு கூறப்பட்டு உள்ளது.

# ‘இது சட்டத்தின் ஆட்சியா, சாத்தானின் ஆட்சியா?’ திமுக எம்.எல்.ஏ. கைதுக்கு ஸ்டாலின் கண்டனம்



சென்னை: திமுக எம்எல்ஏ மார்க்கண்டேயன் கைதுக்கு கண்டனம் தெரிவித்துள்ளஅக்கட்சியின் தலைவர் மு.க.ஸ்டாலின், "தமிழ்நாட்டில் நடைபெறுவது சட்டத்தின் ஆட்சியா, சாத்தானின் ஆட்சியா?" எனக்கேள்வி எழுப்பியுள்ளார். அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், 'ஜனநாயகப் பண்புகள் அறவே இன்றிச் செயல்படும் தவெக ஆட்சியில், விளாத்திக்குளம் எம்.எல்.ஏ. மார்க்கண்டேயன் கைது செய்யப்பட்டிருப்பதற்கு கடும் கண்டனத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆட்சியில் நடைபெறும் தவறுகளையும் அவலங்களையும் சுட்டிக்காட்டும் தி.மு.க. முன்னாள் அமைச்சர்கள், சட்டப்பேரவை உறுப்பினர்கள், இணைய ஆதரவாளர்கள் என அனைவரையும் தொடர்ந்து வேட்டையாடி வருகிறது டேக் டைவர்ஷன் மாடல்த.வெ.க.அரசு.


"அவதூறு வழக்குகளில் கூட எதற்குத் தொடர்பில்லாத குற்றப்பிரிவுகளைச் சேர்க்கிறீர்கள்?" என நீதிமன்றத்திடம் சமீபத்தில்தானே குட்டு வாங்கினீர்கள்?.கைது செய்யப்பட்டுள்ள சட்டப்பேரவை உறுப்பினர் தனது வழக்கறிஞர் மற்றும் ஆதரவாளர்களைச் சந்திக்கக்கூடமறுக்கப்பட்டுள்ளார். அவருக்கான மருந்துகளை வழங்கச் சென்றவர்களும் தடுக்கப்பட்டுள்ளனர். கைது செய்யப்பட்டவரின் அடிப்படைச் சட்ட உரிமைகளும் மனித உரிமைகளும்கூட மறுக்கப்பட்டுள்ளன.

தமிழ்நாட்டில் நடைபெறுவது சட்டத்தின் ஆட்சியா, சாத்தானின் ஆட்சியா? மைதானத்தில் மாத்திரை அரைத்த அமைச்சர் மீதும், சொந்தக் கட்சி பெண் உறுப்பினரின் கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்குமே நடவடிக்கை எடுக்க வக்கற்ற த.வெ.க. அரசு அரசியல் விமர்சனங்களுக்கு மட்டும் அலறித் துடித்துக் கைது செய்வது ஏன்?.

ஆட்சியாளர்களின் சட்டத்துக்குப் புறம்பான உத்தரவுகளை எல்லாம் நிறைவேற்றி அவர்களின் மனதைக் குளிர்விப்பது காவல்துறையினரின் பணி அல்ல.சட்டப்படியும் மனசாட்சிப்படியும் செயல்படுங்கள். இல்லாவிட்டால், பின்விளைவுகள் ஏற்படும்.' எனத் தெரிவித்துள்ளார்.

# வலுக்கும் சிஜேபி போராட்டம்: மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானுடன் மத்திய அமைச்சர் அமித்ஷா சந்திப்பு

புதுடெல்லி: மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வலியுறுத்தி கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர்(சிஜேபி)வலுவான போராட்டம்நடத்திவரும் நிலையில், அவரை மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா சந்தித்துப் பேசியுள்ளார்.



நீட் தேர்வு வினாத்தாள் கசிவு உள்ளிட்ட தேர்வு முறைகேடுகளுக்குப் பொறுப்பேற்று மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதான் பதவி விலக வேண்டும், தேர்வு முறையில் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்பட வேண்டும், பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நீதி வழங்க வேண்டும் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர் கடந்த ஜூன் 20-ம் தேதி முதல் டெல்லி ஜந்தர் மந்தரில் போராட்டங்களை நடத்தி வருகின்றனர். இந்தப் போராட்டத்தில் கலந்து கொண்டு 20 நாட்களுக்கும் மேலாக தொடர் உண்ணாவிரதப் போராட்டத்தை மேற்கொண்ட லடாக்கைச் சேர்ந்த சுற்றுச்சூழல் ஆர்வலர் சோனம் வாங்சுக், டெல்லி சப்தர்ஜங் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். அங்கும் அவர் தனது உண்ணாவிரதத்தை தொடர்ந்து வருவதாகக் கூறப்படுகிறது.

இந்நிலையில், தங்கள் கோரிக்கையை வலியுறுத்தி நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் தொடங்கும் முதல் நாளான இன்று, நாடாளுமன்றத்தை நோக்கி பேரணியாகச் செல்ல கரப்பான்பூச்சி ஜனதா கட்சியினர் முயன்றனர். இதற்காக ஆயிரக்கணக்கான இளைஞர்கள் ஜந்தர் மந்தரில் திரண்டனர்.

பேரணிக்கு அனுமதி மறுத்த டெல்லி போலீஸார்,தடையை மீறி பேரணியாகச்செல்லமுயன்றவர்கள் மீது தடியடி நடத்தினர்; கண்ணீர் புகைக்குண்டுகளை வீசினர். இந்த மோதலில், இரு தரப்பிலும் சிலர் காயமடைந்தனர்.

போராட்டத்தின் தீவிரத்தைக் கருத்தில் கொண்டு, நாடாளுமன்றம் மற்றும் குடியரசுத் தலைவர் மாளிகையின் நுழைவுவாயில்கள் மூடப்பட்டுள்ளன. அதோடு, ஜந்தர் மந்தர் மற்றும் நாடாளுமன்ற வளாகம் உள்ளிட்டப் பகுதிகளில் இணைய சேவையும் துண்டிக்கப்பட்டுள்ளது.

இத்தகைய பதட்டமான சூழல்களுக்கு மத்தியில், நாடாளுமன்ற மழைக்காலக் கூட்டத் தொடர் இன்று தொடங்கியது. வினாத்தாள் கசிவு உள்ளிட்ட விவகாரங்களை எழுப்பி நாடாளுமன்றத்தின் இரு அவைகளிலும் எதிர்க்கட்சிகள் அமளியில் ஈடுபட்டன. இதனால், மக்களவை மற்றும் மாநிலங்களவை இரண்டும் நாள் முழுவதும் ஒத்திவைக்கப்பட்டன. நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள மத்திய கல்வி அமைச்சர் தர்மேந்திர பிரதானின் அலுவலகத்தில் அவரை, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா சந்தித்துப் பேசினார். இந்த சந்திப்பின்போது என்ன விவாதிக்கப்பட்டது என்பது குறித்த விவரங்கள் உடனடியாக தெரியவரவில்லை.


செய்திகள்

உடனுக்குடன் படிக்க

தினத்தளம்

DHINATH DHALAM

வாட்ஸ் அப் குரூப்பில்

இணையுங்கள்

Join my WhatsApp group.

https://chat.whatsapp.com/CgGZM7snNtZ0QMr6or5zVx?mode=wwt

# தேவகோட்டையில் சர்வதேச செஸ் தினவிழா பள்ளி மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்பிப்பு



சிவகங்கை மாவட்டம், தேவகோட்டையில் உள்ளசேர்மன்மாணிக்கவாசகம் நடுநிலைப் பள்ளியில் சர்வதேச செஸ் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

விழாவிற்கு பள்ளி தலைமையாசிரியர் சொக்கலிங்கம்தலைமை தாங்கினார். தேவகோட்டை வட்டார வள மைய ஆசிரியர் பயிற்றுநர் ஜோனி சுபால்டன் முன்னிலை வகித்தார். மாணவி நந்தனா வரவேற்புரை வழங்கினார்.

காரைக்குடியைச் சேர்ந்த செஸ் பயிற்றுநர் காவியா, மாணவ-மாணவியருக்கு சதுரங்க விளையாட்டு தொடர்பான பல்வேறு தகவல்களை எடுத்துரைத்தார். மேலும், மேக்னெட் சதுரங்க பலகையை பயன்படுத்தி சதுரங்க விளையாட்டின் முக்கியத்துவம், ஒவ்வொருகாயின் மதிப்பெண்கள், காய்களின் நகர்வுகள் (Movement) உள்ளிட்ட அம்சங்களை விரிவாக விளக்கினார்.

இதனைத் தொடர்ந்து, பள்ளி அளவில் நடைபெற்ற செஸ் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ-மாணவியருக்கு பரிசுகள் வழங்கி பாராட்டப்பட்டனர்.

விழாவின் நிறைவில் ஆசிரியை முத்துலட்சுமி நன்றியுரை வழங்கினார்.



கள்ளக்குறிச்சி மாவட்டம், திருக்கோவிலூர் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பகுதிகளில் திருக்கோவிலூர் உட்கோட்ட துணை கண்காணிப்பாளர் திரு பார்த்திபன் அவர்கள் மற்றும் காவல் ஆய்வாளர் திரு அன்பழகன் ஆகியோர் தலைமையில் வாகன ஓட்டிகள் தலைக்கவசம் அணிவது விழிப்புணர்வு ஏற்படுத்தி வாகன ஓட்டிகள் தலைக்கவசம் அளித்து விழிப்புணர்வு செய்து வைத்தார்.




கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியரகவளாகத்தில் மக்கள்தொகைகணக்கெடுப்பு 2027 முன்னிட்டு சுயகணக்கெடுப்பை ஊக்கவிக்கும் வகையில் சுய கணக்கெடுப்பை முடித்த மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ஜெ.இ.பத்மஜா, (20.07.2026) திங்கள் கிழமை "நான் என் சுய கணக்கெடுப்பை முடித்துவிட்டேன்" என்ற புகைப்படத்தினை எடுத்துக் கொண்டார்.



கள்ளக்குறிச்சி மாவட்ட ஆட்சியரகத்தில், தமிழ்நாடு நாள் விழாவையொட்டி தியாகதுருகம் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளியில் நடைபெற்ற கட்டுரை மற்றும் பேச்சுப் போட்டிகளில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர்களுக்கு பரிசுத் தொகைக்கான காசோலைகள் மற்றும் சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ஜெ.இ.பத்மஜா, (20.07.2026) திங்கள் கிழமை வழங்கினார்.

### கோவை சாய்பாபா கோவில் அருகே உள்ள தனியார் உணவக அரங்கில்

# 40 ஆண்டுகளுக்குப் பிறகு மீண்டும் சர்வதேச கிராண்ட்மாஸ்டர் சதுரங்கப் போட்டி

## லால்குடி சட்டமன்ற உறுப்பினர் லீமா ரோஸ் மார்ட்டின் துவக்கி வைத்து வீரர்களுக்கு வாழ்த்து தெரிவித்தார்




தமிழ்நாடு சதுரங்க சங்கம் சார்பில் "இன்டர்நேஷனல் கிராண்ட்மாஸ்டர் ஓபன் செஸ் போட்டி 2027" அறிமுக நிகழ்ச்சி கோவை சாய்பாபா கோவில் அருகே உள்ள தனியார் உணவகஅரங்கில் நடைபெற்றது. இந்த போட்டியின் வாயிலாக செய்தியாளர்களை சந்தித்து பேசிய போட்டி ஒருங்கிணைப்பாளர்கள் கூறியதாவது..

சுமார் 40 ஆண்டுகளுக்குப் பிறகு கோவையில், மீண்டும் சர்வதேச கிராண்ட்மாஸ்டர் ஓபன் சதுரங்கப் போட்டி நடைபெறஉள்ளது.மிராக்கிள் ஸ்கூல் ஆஃப் செஸ் மற்றும் கோயம்புத்தூர் மாவட்ட சதுரங்கச் சங்கம், இணைந்து, அக்ஷயா பொறியியல் கல்லூரியின் தலைப்பின் அனுசரணையில், இப்போட்டி 2027 ஜனவரி 11 முதல் 18 வரை நடைபெறுகிறது.

1987-ஆம் ஆண்டு கோவையில், நடைபெற்ற சக்தி சுகர்ஸ் சர்வதேச கிராண்ட்மாஸ்டர்போட்டிக்குப் பிறகு நடைபெறும் முதல் போட்டியாக இது அமைகிறது. போட்டியில் A,B,C,D என நான்கு பிரிவுகள் இடம்பெறுகின்றன. மொத்தம் 45 லட்சம் ரொக்கப் பரிசுத் தொகையுடன், 2 புதிய கார்கள், 6 மோட்டார் சைக்கிள்கள் மற்றும் 100 செஸ் கடிகாரங்கள் சிறப்புபரிசுகளாகவழங்கப்படுகின்றன என தெரிவித்தனர். இந்த போட்டியில் கலந்து கொள்ள,25-க்கும் மேற்பட்ட நாடுகளைச் சேர்ந்த வீரர்கள், 40 முதல் 45 கிராண்ட்மாஸ்டர்கள் மற்றும் சர்வதேச மாஸ்டர்கள் பங்கேற்பார்கள் என்றும், சுமார் 2,000 வீரர்கள் கலந்து கொள்வார்கள் என்றும் தெரிவித்தனர்.

இந்தசர்வதேசபோட்டி, இந்திய இளம் வீரர்கள் கிராண்ட்மாஸ்டர், சர்வதேச மாஸ்டர், நார்ம்களைப் பெற சிறந்த வாய்ப்பை வழங்குவதுடன், தமிழகத்தில் சதுரங்க வளர்ச்சிக்கு மேலும் ஒரு முக்கிய மைல்கல்லாக அமையும் எனவும் கூறினர். நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தினராக பங்கேற்ற லால்குடி சட்டமன்ற உறுப்பினர் லீமா ரோஸ் மார்ட்டின் அனைவரது மத்தியில் கூறியதாவது..

40 ஆண்டுகளுக்குப் பிறகு கோவையில் மீண்டும் சர்வதேச கிராண்ட்மாஸ்டர் சதுரங்கப் போட்டி நடைபெறுவது வரலாற்றுச் சிறப்புமிக்க நிகழ்வாகும் என்றார். சதுரங்கம் மாணவர்களின் சிந்தனைத் திறன், ஒழுக்கம் மற்றும் முடிவெடுக்கும் திறனை வளர்க்கும் சிறந்த விளையாட்டு என்றும், இந்தப் போட்டி தமிழக இளம்வீரர்களுக்கு உலகத் தரத்தில் தங்களை நிரூபிக்க சிறந்த வாய்ப்பாக அமையும் என்றும் அவர் தெரிவித்தார்

# திருப்பாற்கடல் பிரசன்ன வெங்கடேச பெருமாள் கோவிலில் கும்பாபிஷேகம் நடத்தக்கோரி ஆட்சியரிடம் மனு



இந்து மக்கள் கட்சி சார்பில், வாலாஜா ஒன்றியத்துக்கு உட்பட்ட திருப்பாற்கடல் பிரசன்ன வெங்கடேச பெருமாள் திருக்கோவிலில் உடனடியாக மகா கும்பாபிஷேகம் நடத்த நடவடிக்கை எடுக்கக் கோரி, ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித் தலைவரிடம் திங்கள்கிழமை மனு அளிக்கப்பட்டது.

மனுவில், இக்கோவிலில் கடந்த 2011-ஆம் ஆண்டு மகா கும்பாபிஷேகம் நடைபெற்ற நிலையில், 15 ஆண்டுகள் கடந்தும் இதுவரை மீண்டும் கும்பாபிஷேகம் நடைபெறவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, சம்பந்தப்பட்ட இந்து சமய அறநிலையத் துறைக்கு உரிய உத்தரவு பிறப்பித்து, கோவிலில் விரைவில் கும்பாபிஷேகம் நடத்த நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும், மாவட்ட ஆட்சித் தலைவர் நேரில் ஆய்வு செய்து உடனடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்றும் கோரப்பட்டுள்ளது.

இந்த மனுவை இந்து மக்கள் கட்சியின் வேலூர் கோட்டத்தலைவர் எஸ்.கே. மோகன் தலைமையில் வழங்கினர்.மாவட்டசெயலாளர் பார்த்திபன், ஆன்மீகப் பிரிவு மாவட்டத் தலைவர் ஸ்ரீதர், வாலாஜா ஒன்றிய பொதுச் செயலாளர் குமார், வாலாஜா ஒன்றிய செயலாளர் மணிவண்ணன், வாலாஜாகிழக்கு ஒன்றியத் தலைவர் அன்பழகன், வாலாஜா நகர துணைத்தலைவர் சத்யநாராயணன், வாலாஜா கிளைத் தலைவர் சீனிவாசன் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் உடனிருந்தனர்.

# நீட் தேர்வில் முதல் முயற்சியிலே வெற்றி பெற்ற நெல்லை மாவட்டம் பேட்டையைச் சேர்ந்த நசீர் பரித்



நெல்லை மாவட்டம் பேட்டை முகமது நயினார் பள்ளிவாசல் கீழத் தெருவை சேர்ந்தவர் டாக்டர் முகைதீன் அப்துல் காதர். இவர் நாகர்கோவில் காரகோணம் மிஷன் மருத்துவமனையில் மயக்கவியல் துறையில் பேராசிரியராக பணியாற்றி வருகிறார். இவருடைய மனைவி டாக்டர் பாத்திமா. இவர் நெல்லை சந்திப்பு அரவிந்த் கண் மருத்துவமனையில் குழந்தைகள் நல சிறப்பு மருத்துவராக பணியாற்றி வருகிறார். இவர்களுக்கு இரண்டு குழந்தைகள் உள்ளனர். இவருடைய மூத்த மகள் ஷனாஸ் பரிதா எம்பிபிஎஸ் முடித்துள்ளார். இவர்களுடைய மகன் நசீர் பரித்.இவர் தியாகராஜ நகரில் உள்ள புஷ்பலதா சிபிஎஸ்சி பள்ளியில் இந்த வருடம் ப்ளஸ் டூ முடித்துள்ளார். 500 -க்கு 476 மதிப்பெண்கள் பெற்றுள்ளார்.மருத்துவ படிப்பில் சேர்வதற்கான நுழைவுத் தேர்வு (நீட்) எழுதியுள்ளார். முதல் முயற்சியிலேயே நீட் தேர்வு எழுதி வெற்றி பெற்ற இவர் 720க்கு 671 மதிப்பெண்கள் பெற்று நீட் தேர்வில் புஷ்பலதா பள்ளி அளவில் முதல் இடத்தையும் அகில இந்திய அளவில் 482 வது இடத்தையும் பெற்று சாதனை படைத்துள்ளார். சாதனை படைத்த மாணவனை பலரும் பாராட்டி வருகின்றனர்.

# பஞ்சமி நிலங்களை மீட்டு இலவச வீட்டுமனை பட்டா வழங்க கோரி நரிக்குறவர் மக்கள் மனு



ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்ப்பு முகாமில்,அரக்கோணம் தாலுகா தணிகைப்போளூர் நரிக்குறவர் காலனி மக்கள் பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி மாவட்ட நிர்வாகத்திடம் மனு அளித்தனர்.

அந்த மனுவில், தணிகைப்போளூர் நரிக்குறவர் காலனியில் சுமார் 135 குடும்பங்கள் வசித்து வருவதாகவும், அவர்களுக்கு இலவச தொகுப்பு வீடுகள், இலவச மின் இணைப்பு மற்றும் இலவச வீட்டுமனை பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேலும்,அரக்கோணம் தாலுகாவிற்கு உட்பட்ட கீழ்பாக்கம் - 164 ஏக்கர், முதூர் - 98 ஏக்கர், தணிகைப்போளூர் - 260 ஏக்கர் உள்ளிட்ட பகுதிகளில் உள்ள பஞ்சமி நிலங்களை மீட்டு, சம்பந்தப்பட்ட வருவாய்த் துறையினர் மூலம் ஆய்வு செய்து,தலித் மக்களுக்கு இலவச பட்டாக்கள் வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மனுவில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

இந்த கோரிக்கைகள் மீது மாவட்ட நிர்வாகம் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என நரிக்குறவர் சமூகத்தைச் சேர்ந்தவர்கள் கேட்டுக் கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (20.07.2026) மாற்றுத்திறனாளிகளிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று, குறைகள் கேட்டறிந்தார்.

# ஈரோட்டில் கூட்டுறவு வங்கி ஊழியர்கள் சார்பில் 13 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி பேரணி மற்றும் ஆட்சியரிடம் மனு அளிப்பு



தமிழகம் முழுவதும் உள்ள தொடக்க மற்றும் நகர் கூட்டுறவு கடன் சங்கங்களில் பணிபுரியும் பணியாளர்கள் மற்றும் அதன் கட்டுப்பாட்டில் உள்ள நியாயவிலைக் கடைப் பணியாளர்களின் 13 அம்ச கோரிக்கைகளை நிறைவேற்ற வலியுறுத்தி, தமிழ்நாடு மாநில தொடக்க கூட்டுறவு வங்கி அனைத்து பணியாளர்கள் சங்கத்தின் சார்பில் மாநில தழுவிய அளவில் பேரணி நடத்தப்பட்டு, ஈரோடு மாவட்ட ஆட்சியரிடம் கோரிக்கை மனு சமர்ப்பிக்கப்பட்டது. ஈரோட்டில் நடைபெற்ற இந்த மாபெரும் கோரிக்கை பேரணிக்கு மாவட்டத் தலைவர் S.M.மேசப்பன் தலைமை தாங்கினார். மாவட்டச் செயலாளர் K.மாரிமுத்து முன்னிலை வகித்தார். பேரணியின் நிறைவில், மாவட்ட ஆட்சியர் வாயிலாக தமிழக முதலமைச்சருக்கு அனுப்பும் வகையில் கோரிக்கை மனு அளிக்கப்பட்டது. இந்நிகழ்வில் மாவட்ட துணைத்தலைவர்கள் M.மதியழகன், P.செந்தில்குமார், மாவட்ட இணைச்செயலாளர்கள் G.முத்துகிருஷ்ணன், R.வசந்தகுமார், ஒன்றிய நிர்வாகிகள், சங்கஉறுப்பினர்கள், நியாயவிலைக்கடை பணியாளர்கள், நகை மதிப்பீட்டாளர்கள், கணினி பணியாளர்கள் மற்றும் ஓய்வு பெற்ற பணியாளர்கள் சங்க மாவட்ட தலைவர் பூசப்பன், மாவட்டச்செயலாளர் முஜிபுல்லா உள்ளிட்ட திரளானோர் கலந்து கொண்டு, கோரிக்கைகளை நிறைவேற்றக் கோரி முழக்கமிட்டனர். நியாயவிலைக் கடைகள் மூலம் செயல்படுத்தப்படும் தாயுமானவர் திட்டத்தில் உள்ள குறைபாடுகளைக் களைந்து மறுபரிசீலனைசெய்ய வேண்டும். இதில் நடமாட இயலாத முதியோர்கள், நோயாளிகள், மாற்றுத்திறனாளிகளை மட்டுமே சேர்க்க வேண்டும் என்றும், வசதி படைத்தோர் மற்றும் 100 நாள் வேலை திட்டத்திற்கு செல்வோர் ஆகியோரை இத்திட்டத்திலிருந்து விடுவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. மேலும்,பயனாளிகுடும்பத்தில் உள்ள பிற உறுப்பினர்களிடம் பொருட்களை விநியோகம் செய்ய அனுமதிப்பதோடு, கைரேகை மற்றும் கருவிழி சரிபார்ப்பு முறையை ரத்து செய்து பாக்கெட் முறையில் விநியோகம் செய்ய வேண்டும்எனவும்,ஏற்றி இறக்கும் கூலி மற்றும் வண்டி வாடகைத் தொகையை உயர்த்தி வழங்க வேண்டும் எனவும் கோரப்பட்டது. கடந்த 01.04.2023 முதல் புதிய ஊதியம் அனுமதிக்கப்பட்ட நிலையில், விதிக்கப்பட்ட நிபந்தனைகளால் 40 சதவீத பணியாளர்கள் புதிய ஊதியம் பெற இயலாத நிலை உள்ளதால் அந்நிபந்தனைகளை முழுமையாகத் தளர்த்தி புதிய ஊதிய நிலுவைத் தொகையை வழங்க வேண்டும் என வலியுறுத்தப்பட்டது. பணியாளர்கள் ஓய்வு பெறும் நாளிலேயே அனைத்து நிதிப் பலன்களையும் வழங்கிட வேண்டும், 2021-ம் ஆண்டுக்குப் பின்னர் பணி ஓய்வு பெற்ற அனைவருக்கும் ஓய்வூதியம் வழங்கிட வேண்டும், கருணைத்தொகையை 1,000 ஆக உயர்த்தி வழங்க வேண்டும் என்பன உள்ளிட்ட ஓய்வூதிய சலுகை கோரிக்கைகளும் முன்வைக்கப்பட்டன. இரண்டாண்டுகளுக்கு மேல் பணிபுரியும் கணினி பணியாளர்களைச் சிறப்புத்தேர்வுகள் மூலம் பணி நிரந்தரம் செய்ய வேண்டும், தகுதியுள்ள நகை மதிப்பீட்டாளர்களை நிரந்தரப்படுத்த வேண்டும், மாவட்ட அளவில் பணிமூப்புப் பட்டியல் தயாரித்து பதவி உயர்வு வழங்க வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. வெளிமாவட்டங்களில் பணிபுரிவோருக்குச் சொந்த மாவட்டத்திற்கு இடமாறுதல் வழங்க வேண்டும், பணிக்கொடையை 25 லட்சமாக உயர்த்தி வழங்க வேண்டும், செயலாளர்களைக் கட்டாயப்படுத்தி பயிர்க்கடன் வழங்கச் சொல்லி மன உளைச்சலுக்கு ஆளாக்குவதையும், வாய்மொழி உத்தரவுகளை அமல்படுத்தத் தவறினால் ஒழுங்கு நடவடிக்கை எடுப்பதாக அச்சுறுத்துவதையும் கைவிட வேண்டும் எனவும் கோரிக்கை வைக்கப்பட்டது. இக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படாத பட்சத்தில், வரும் 03.08.2026 முதல் காலவரையற்ற வேலைநிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடப்போவதாக சங்க நிர்வாகிகள் எச்சரித்துள்ளனர்.

# கோவையில் ஸ்ரீ ஐஸ்வரீயா மருத்துவமனை இந்திய மருத்துவ சங்க கோவை கிளை சார்பில் இலவச பல்துறை மருத்துவ முகாம்

## பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் வி. சம்பத்குமார் துவக்கி வைத்தார்



கோவை சின்னதாடகம், ஆர்.எஸ். புரம் பகுதிகளில் இயங்கி வரும் ஸ்ரீ ஐஸ்வரீயா மருத்துவமனை மற்றும் இந்திய மருத்துவ சங்கம் கோவை கிளை இணைந்து நடத்தும் மாபெரும் இலவச பல்துறை மருத்துவ முகாம் இன்று கோவை சின்னதாடகம் வடக்கு வீதியில் உள்ள ஸ்ரீ ஐஸ்வரீயா மருத்துவமனை வளாகத்தில் நடைபெற்றது.

முகாமை கோவை மாவட்ட பொறுப்பு அமைச்சரும், பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சருமான வி. சம்பத்குமார் முதன்மை சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு துவக்கி வைத்தார். விழாவில் இந்திய மருத்துவ சங்கத்தின் தமிழ்நாடு, 2024–2025 கவுரவ செயலாளர் டாக்டர் எஸ். கார்த்திக் பிரபு, சின்னதாடகம் காவல் நிலைய இன்ஸ்பெக்டர் ஏ. சுமதி, ரோட்டரி மற்றும் உள்ளாட்சி அமைப்புகளின் முக்கியப் பிரதிநிதிகள், மற்றும் கோவை ஐ.எம்.ஏ தலைவர் டாக்டர் கோஷல் ராம், கவுரவ செயலாளர் டாக்டர் டி. பரமேஸ்வரன், நிதிச் செயலாளர் டாக்டர் பாலமுருகன் உள்ளிட்ட பலர் சிறப்பு விருந்தினர்களாகப் பங்கேற்றனர். நலன் கருதி இம்முகாமில் பல்வேறு மருத்துவ ஆலோசனைகளும், பரிசோதனைகளும் முற்றிலும் இலவசமாக வழங்கப்பட்டன. சர்க்கரை பரிசோதனை, நரம்பியல் பரிசோதனை, கண் பரிசோதனை, பல் பரிசோதனை, மற்றும் கொழுப்பு சத்து கண்டறிதல். கால் பாதம் பாதுகாப்பு பற்றிய ஆலோசனை, உடற்பயிற்சி முறைகள், உணவியல் ஆலோசனை மற்றும் பல்துறை நிபுணத்துவம் பெற்ற மருத்துவர்களின் பிரத்யேக ஆலோசனைகள் வழங்கப்பட்டன.

முகாமிற்கு வரும் நோயாளிகளுக்குத் தேவையான மருந்துகள் இலவசமாக வழங்கப்பட்டது.

மருத்துவர்களின் பரிந்துரையின் பேரில் மூன்று மாத சர்க்கரை அளவு, கொழுப்பு சத்து, மற்றும் எஸ்.யு.ஏ போன்ற மேம்பட்ட பரிசோதனைகள் இலவசமாகச் செய்யப்பட்டது.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் தமிழ்நாடு நாளை முன்னிட்டு நடைபெற்ற கட்டுரை, பேச்சுப்போட்டிகளில் வெற்றி பெற்ற பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு பாராட்டுச் சான்றிதழ்,புத்தகங்களை மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (20.07.2026) வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்தகுமார், (துணை இயக்குநர்) தமிழ் வளர்ச்சித் துறை ஜோதி உட்பட பலர் உள்ளனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் ச.கந்தசாமி நேற்று (20.07.2026) பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெற்று குறைகள் கேட்டறிந்தார்.உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு.சாந்த குமார் உட்பட பலர் உள்ளனர்.

# சங்கரன்கோவில் அருகே மலையடிபட்டியில் தொல்லியல்துறை சார்பில் நடைபெறும் அகழ்வாராய்ச்சியை பார்வையிட்ட அமைச்சர் ராஜ்மோகன்



பழனி கோவில் நிலமோசடி முறைகேடு குறித்த முன்னாள் அமைச்சர் மூர்த்தியின் விமர்சனம் குறித்த கேள்விக்கு முன்னாள் பத்திரப் பதிவுத்துறை அமைச்சர் ஊழலைபற்றி பேசுவதா நகைச்சுவையாக இருக்கிறது என கூறி நக்கலாக சிரித்த அமைச்சர்...

தென்காசி மாவட்டம் கரிவலம்வந்தநல்லூர் அருகே உள்ள மலையடிப்பட்டி கிராமத்தில் தொல்லியல் துறை சார்பில் அகழ்வாய்வு நடத்தப்பட்டு வருகிறது அதனை பள்ளி கல்வித்துறை அமைச்சரும் தொல்லியல் துறை அமைச்சருமான ராஜ்மோகன் ஆய்வு பணி மேற்கொண்டார் அப்போது ஊடக செய்தியாளர்களை சந்தித்தபோது தெரிவித்ததாவது:

அரசுப் பள்ளி மாணவர்கள் அனைவரும் இனி வருங்காலங்களில் கல்விசார் சுற்றுலா செல்லும் வகையில் திட்டமிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்தார். மேலும்,அரசுப் பள்ளிகளில் பயிலும் ஆட்டிசம் குழந்தைகளுக்காக மாதம் ஒருமுறை உலகத் தரமான திரைப்படங்கள் திரையிடப்படும் என்றார்.

சுதந்திரப் போராட்ட வீரர் வெண்ணிக் காலாடிக்கு அரசு விழா அறிவிக்கப்படும் என்ற கோரிக்கை குறித்து அரசின் கவனத்திற்கு கொண்டு செல்லப்படும் எனவும் அமைச்சர் குறிப்பிட்டார்.

பழனி திருக்கோவில் நில மோசடி விவகாரம் தொடர்பாக திமுக முன்னாள் அமைச்சர் மூர்த்தி முன்வைத்து வரும் குற்றச்சாட்டுகள் குறித்த கேள்விக்கு ஊழலை குறித்து அவர் பேசுவது பெரும் நகைச்சுவையாக உள்ளது" என்று நக்கலாக சிரித்தபடி ராஜ்மோகன் விமர்சித்தார்.

சங்கரன்கோவில் சங்கரநாராயண சுவாமி திருக்கோவில் ராஜகோபுரம் அலங்காரப் பணிகள் நடைபெற்று முடிந்தும் திறப்பு விழா காணாமல் நீண்ட நாட்களாக கிடப்பில் போடப்பட்டிருப்பது குறித்த கேள்விக்கு

எந்த ஒரு அரசியல் பணியும் மக்கள் பணியும் கட்சி வேறுபாடு இன்றி தொடரும் என்றார். மேலும், செய்தித் துறையிலும் பல புதிய சிறப்பு திட்டங்கள் விரைவில் செயல்படுத்தப்பட உள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார்.



பள்ளிக்கல்வி, தமிழ் வளர்ச்சி, செய்தி மற்றும் விளம்பரத்துறை அமைச்சர் திரு.ராஜ்மோகன் தென்காசி மாவட்டம், திருவேங்கடம் வட்டம், கரிவலம்வந்தநல்லூர் மலையடிப்பட்டியில் தொல்லியல் துறையின் மூலம் அகழாய்வு பணிகள் நடைபெற்று வருவதை பார்வையிட்டார். சுற்றுலா இயக்குநர்/சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் மற்றும் தொல்லியல் துறை இயக்குநர் முனைவர் வீ.ப. ஜெயசீலன், உடன் இருந்தார்.

# தென்காசி மாவட்டம் குற்றாலத்தில்
# நகராட்சி பணியாளர்களின் குழந்தைகள் 41 பேருக்கு பரிசுகள் வழங்கி பாராட்டிய நகராட்சி நிர்வாக இயக்குனர் மதுசூதனன் ரெட்டி



தென்காசி மாவட்டம் குற்றாலம் கலைவாணர் கலையரங்கில் நகராட்சி மாநகராட்சி பணியாளர்களின் குழந்தைகளுக்கான 16வது ஆண்டு பரிசளிப்பு விழாவில் நகராட்சி நிர்வாக இயக்குனர் மதுசூதனன் ரெட்டி கலந்து கொண்டு 41 மாணவ மாணவிகளுக்கு பரிசு வழங்கி பாராட்டினார் இது பற்றிய விவரமாவது தமிழகத்தில் உள்ள அனைத்து நகராட்சி மாநகராட்சி பணியாளர்களின் குழந்தைகள் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு தேர்வில் மாநில அளவில் சிறப்பாக தேர்வு பெற்றவர்களுக்கு ஆண்டுதோறும் பரிசு வழங்கி பாராட்டுவது வழக்கம்- நகராட்சி மாநகராட்சி பணியாளர்களின் குழந்தைகளுக்கான 16வது ஆண்டு பரிசளிப்பு விழா இந்த ஆண்டு தென்காசி மாவட்டம் குற்றாலத்தில் நடைபெற்றது குற்றாலம் கலைவாணர் கலை அரங்கில் நடைபெற்ற விழாவிற்கு தமிழ்நாடு மாநில அனைத்து மாநகராட்சி அலுவலர் சங்கங்களின் கூட்டமைப்பு தலைவர் ராதாகிருஷ்ணன் தலைமை தாங்கினார் பாளையங்கோட்டை சீதாராமன் நகராட்சி மாநகராட்சி பணியாளரின் குரல் இதழின் ஆசிரியர் மற்றும் பதிப்பாளர் வரவேற்புரை ஆற்றினார் தமிழ்நாடு மாநில அனைத்து மாநகராட்சி அலுவலர் சங்கத்தின் கூட்டமைப்பு பொதுச்செயலாளர் சுஜாத் அலி மற்றும் பொருளாளர் இளங்கோவன் முன்னிலைவகித்தனர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்ட நகராட்சி நிர்வாக இயக்குனர் மதுசூதனன் ரெட்டி இ.ஆ.ப.அவர்கள் கடந்த இரு தினங்களாக கன்னியாகுமரி திருநெல்வேலி மற்றும் தென்காசி மாவட்ட அனைத்து நகராட்சி அலுவலகங்கள் மற்றும் திட்ட பணிகளை ஆய்வு செய்து அதன் பின்னர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டார் 2026 பொது தேர்வில் 10 மற்றும் 12 ஆம் வகுப்பு பயின்று மாநில அளவில் சிறப்பாக தேர்வு பெற்ற 41 மாணவமாணவிகளுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டி வாழ்த்து தெரிவித்தார் இந்நிகழ்ச்சியில் நகராட்சி மண்டல நிர்வாக இயக்குனர் நரேந்திரன் பேரூராட்சிகளின் உதவி இயக்குனர் கிறிஸ்தவ பிரதாஸ் கண்ணன் தமிழ்நாடு அரசு அலுவலர் ஒன்றிய தென்காசி மாவட்ட தலைவர் சுப்பிரமணியம் திருநெல்வேலி மாநகராட்சி ஆணையர் உட்பட அனைத்து நகராட்சி பணியாளர்கள் அலுவலர்கள் கலந்து கொண்டனர் இந்நிகழ்ச்சியில் தென்காசி நகராட்சி சுகாதார அலுவலர் பிச்சையா பாஸ்கர் கடையநல்லூர் உதவியாளர் மாரியப்பன் மற்றும் தென்காசி மாவட்ட நகராட்சி பணியாளர்கள் சங்க நிர்வாகிகள் உட்பட ஏராளமான கலந்து கொண்டனர் மேலும் திருநெல்வேலி மாநகராட்சி சுகாதார அலுவலர் பாலச்சந்தர் அவர்கள் நன்றியுரை ஆற்றினார்



திருநெல்வேலி காவல் சரகத்திற்கு உட்பட்ட தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் நடைபெற்று வரும் ஆடித்தபசு திருவிழாவின் இரண்டாவது நாளில், காவல்துறை பாதுகாப்பு ஏற்பாடுகளை காவல்துறை துணைத் தலைவர் முனைவர் இரா. திருநாவுக்கரசு, இ.கா.ப., அவர்கள் நேரில் ஆய்வு செய்தார். அதை தொடர்ந்து, திருவிழா பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த காவல் அதிகாரிகள் மற்றும் காவல் ஆளிநர்களுக்காக நடைபெற்ற இரவு விருந்தில், அவர்களுடன் இணைந்து ஒரே வரிசையில் அமர்ந்து உணவருந்தினார். பதவி பேதமின்றி அனைவருக்கும் ஒரே உணவு என்ற பண்பை வெளிப்படுத்திய இந்நிகழ்வு, காவல்துறையினரிடையே ஒற்றுமை மற்றும் சமத்துவ உணர்வை வலியுறுத்துவதாக அமைந்தது. திருநெல்வேலி காவல் சரகம்.



கருப்பாயூரணி, பாரதிபுரம், சீமான் நகர் நாடார் உறவின்முறை சார்பாக பாரதப் பெருந்தலைவர் காமராஜர் அவர்களின் 124 வது பிறந்தநாள் விழா கல்வி வளர்ச்சி நாள் இலவச கண் சிகிச்சை முகாம் & பரிசளிப்பு விழா வை முன்னிட்டு காலை 9 மணி அளவில் கே பி எஸ் நாடார் உறவின்முறை மற்றும் ஆதி கண் மருத்துவமனை இணைந்து நடத்திய கண் சிகிச்சை மருத்துவ முகாமை உறவின்முறை தலைவர் மாரிக்கனி நாடார் அவர்கள் தொடங்கி வைத்தார் உடன் செயலாளர் கே சந்திரசேகர பாண்டியன் நாடார் பொருளாளர் ஆர் உதயகுமார் நாடார் ஆகியோர் கலந்து கொண்டனர். இதில் ஏராளமானோர் கலந்து கொண்டு பயன் பெற்றனர்.

# தேசிய சிறப்பு சாதனையாளர் விருது பெற்றார் டாக்டர் ஏ. ஜான் சிங்கராயர்
## கோவை மாவட்ட தடகள சங்கம் சார்பில் பாராட்டு விழா நிகழ்ச்சி



கோவை ஒருங்கிணைந்த வசதி மேலாண்மை சேவைகள் துறையில் சிறப்பான சேவையாற்றி வரும் பர்ஸ்ட் அண்ட் பெஸ்ட் சர்வீசஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநர் டாக்டர் ஏ.ஜான் சிங்கராயர், தேசிய அளவிலான "சிறப்பு சாதனையாளர் விருது" பெற்று கோவைக்கு பெருமை சேர்த்துள்ளார். அகில இந்திய சாதனையாளர்கள் அறக்கட்டளை சார்பில், "தனிநபர் சாதனைகளும் தேசிய வளர்ச்சியும்" என்ற தலைப்பில் புதுதில்லியில் நடைபெற்ற தேசிய கருத்தரங்கில் இந்த விருது வழங்கப்பட்டது. தன்னிறைவு பாரதம் என்ற நோக்கத்தை முன்னிறுத்தி நடைபெற்ற இந்நிகழ்வில், தொழில்துறையில் சிறந்த பங்களிப்பை வழங்கியதற்காக டாக்டர் ஜான் சிங்கராயர் கவுரவிக்கப்பட்டார்.

பாதுகாப்பு காவலராக தனது பணியைத் தொடங்கிய அவர், கடின உழைப்பு, நேர்மை மற்றும் விடாமுயற்சியின் மூலம் வெற்றிகரமான தொழில்முனைவோராக உயர்ந்துள்ளார். தற்போது தனது நிறுவனம் மூலம் நூற்றுக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்பை உருவாக்கி, தரமான மனிதவள மற்றும் ஒருங்கிணைந்த வசதி மேலாண்மை சேவைகளை வழங்கி வருகிறார்.

தேசிய அளவில் கிடைத்துள்ள இந்த விருது,அவரது தொழில்முறை திறன், சமூகப் பொறுப்பு மற்றும் நாட்டின் வளர்ச்சிக்கான பங்களிப்புக்கு கிடைத்த உயரிய அங்கீகாரமாக கருதப்படுகிறது , கோவை மாவட்ட தடகள சங்கம் சார்பில் நடைபெறவுள்ள 65-வது மாவட்ட அளவிலான தடகளப் போட்டியின் நிறைவு விழாவில் டாக்டர் ஏ. ஜான் சிங்கராயருக்கு சிறப்பு பாராட்டு விழா நடத்தப்பட உள்ளதாக

சங்கத் தலைவர் டாக்டர் லீமா ரோஸ் மார்ட்டின் செயலாளர் பி. கே. ஷம்சுதீன், தொழில்நுட்ப ஒருங்கிணைப்பாளர் எஸ். சீனிவாசன் ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

# தென்காசி மாவட்டம் கடையநல்லூரில் 'போதை இல்லா தென்காசியை' உருவாக்கும் நோக்கில் விழிப்புணர்வு பிரச்சார கூட்டம்



தென்காசி மாவட்டம், கடையநல்லூர் சட்டமன்றத் தொகுதியில், முதன்மை சேவகர் அண்ணாமலை அவர்களின் "We The Leaders" இயக்கத்தின் சார்பில், "போதை இல்லா தென்காசி" உருவாக்கும் நோக்கில் போதை விழிப்புணர்வு பிரச்சார கூட்டம் கடையநல்லூர் புதிய பேருந்து நிலையம் முன்பு நடைபெற்றது.

இந்நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கடையநல்லூர் சுப்ரமணியன், கொடிக்குறிச்சி ஊராட்சி மன்றத் தலைவர் தெட்சிணாமூர்த்தி, இடைகால் கருப்பசாமி மற்றும் தென்காசி முத்துசெல்வம் ஆகியோர் சிறப்பாக செய்திருந்தனர். செந்தில்குமரன், வழக்கறிஞர் முத்து கிருஷ்ணன், சுப்ரமணியன், ஆறுமுகம், முன்னாள் காவல் ஆய்வாளர் ஆறுமுகசாமி, மருத்துவர் லட்சுமணன், கிருஷ்ணாபுரம் செந்தில், சச்சிதானந்தம், சுரேஷ், ரஞ்சித், தர்மராஜ் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். 50-க்கும் மேற்பட்ட தன்னார்வலர்கள் பங்கேற்று,பொதுமக்களிடம் போதைப்பொருட்களின் தீமைகள் குறித்து விழிப்புணர்வு ஏற்படுத்தினர். மேலும், போதை பழக்கத்திலிருந்து இளைஞர்களையும்,சமூகத்தையும் பாதுகாக்க வேண்டிய அவசியத்தை வலியுறுத்தி துண்டுப் பிரசுரங்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவரும் "போதைக்கு எதிராக உறுதியாக நிற்போம்; போதை இல்லா தென்காசியை உருவாக்க பாடுபடுவோம்" என்ற உறுதிமொழியை ஏற்றுக்கொண்டனர்.

போதைப்பொருள் பயன்பாட்டை முற்றிலுமாக ஒழித்து, ஆரோக்கியமான மற்றும் பாதுகாப்பான தென்காசியை உருவாக்க அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும் என நிகழ்ச்சியில் வலியுறுத்தப்பட்டது.

# திரிபுரா டிஜிபி அனுராக் தன்கர் காவல் தலைமையகத்தில் தற்கொலை




அகர்தலா: திரிபுரா மாநில காவல் துறை தலைவர் அனுராக் தன்கர்,அகர்தலாவில் உள்ள காவல் தலைமையகத்தில் தனது கைத்துப்பாக்கியால் சுட்டு தற்கொலை செய்துகொண்டதாகதகவல் வெளியாகி உள்ளது.

திரிபுரா மாநில காவல் துறைதலைவராகஇருந்த அமிதாப் ரஞ்சனுக்குப் பிறகு, அந்தப் பொறுப்புக்கு கடந்த மே 2025-ல் நியமிக்கப்பட்டவர் அனுராக் தன்கர். 1994-ம் ஆண்டு பிரிவு ஐபிஎஸ் அதிகாரியான இவர், சிபிஐ அதிகாரியாகவும், திரிபுரா மாநில புலனாய்வுப் பிரிவு தலைவராகவும் பணியாற்றியவர். தொழில்முறை அணுகுமுறை, நீண்டகால காவல் துறை அனுபவம் ஆகியவற்றைக் கொண்ட அனுராக் தன்கர், மாநிலத்தின் மிக மூத்த ஐபிஎஸ் அதிகாரிகளில் ஒருவராக கருதப்பட்டார்.

இந்நிலையில், அகர்தலாவில் உள்ள காவல் தலைமையகத்தில் இன்று அவர் சடலமாகக் கண்டெடுக்கப்பட்டார். முதற்க ட்டத் தகவலின்படி, அனுராக் தன்கர், தனது சொந்த துப்பாக்கியால் தன்னைத் தானே சுட்டுக்கொ ண்டதாகக் கருதப்படுகிறது.

அவர் உடனடியாக அகர்தலாவில் உள்ள கோவிந்த் வல்லப் பந்த் மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டார். அங்கு, அவர் ஏற்கனவே இறந்துவிட்டதாக மருத்துவர்கள் அறிவித்தனர். கோவிந்த் வல்லப் பந்த் மருத்துவமனை மருத்துவர் பிரதீப் கவுமிக் கூறுகையில், "அவர் மதியம் 12 மணிக்கு மருத்துவமனைக்குக் கொண்டுவரப்பட்டார். அப்போது அவருக்கு நாடித் துடிப்பு, ரத்த அழுத்தம் உட்பட உயிர் இருப்பதற்கான எந்த அறிகுறியும் இல்லை. சிபிஆர் மூலம் 40 நிமிடங்களுக்கும் மேலாக நாங்கள் முயன்றோம். ஆனால், அவரை காப்பாற்ற முடியவில்லை. அவர் இறந்துவிட்டார் என்பது மதியம் 12.48 மணிக்கு அறிவிக்கப்பட்டது. பிரேத பரிசோதனைக்குப் பிறகே இறக்கான சரியான காரணம் தெரியவரும்" என்று தெரிவித்துள்ளார். அனுராக் தன்கர் உயிரிழப்புக்கான துல்லியமான காரணத்தைக் கண்டறிவதற்கான அதிகாரப்பூர்வ விசாரணை தொடங்கப்பட்டுள்ளது. மாநிலத்தின் காவல்துறை தலைவர் ஒருவரே தனது அலுவலகத்தில் தற்கொலை செய்து கொண்டிருப்பது காவல் துறைமற்றும்அரசு அதிகாரிகளிடையே பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. தற்கொலை தீர்வல்ல: தற்கொலை என்பது எந்த ஒரு பிரச்சினைக்கும் தீர்வு அல்ல. தற்கொலை எண்ணம் தோன்றினால் சம்பந்தப்பட்டவர்கள் உடனடியாக 'சினேகா' தற்கொலை தடுப்பு உதவி எண்: 044-24640050, மாநில தற்கொலை தடுப்பு உதவி எண்: 104, ஐகால் (iCall Pychosocial) உதவி எண் - 022-25521111 ஆகிய எண்களுக்கு தொடர்பு கொள்ளலாம்.

# India gets first dengue vaccine as DCGI approves Takeda's QDENGA



Japan-based Takeda Biopharmaceuticals on Monday announced that India's drug regulator has granted market authorisation to its anti-dengue vaccine QDENGA, making it the first dengue vaccine approved for use in the country.

"The Drugs Controller General of India (DCGI) has granted market authorisation (CT-20, New Drugs and Clinical Trials (NDCT) Rules, 2019) for QDENGA, Takeda's dengue vaccine for the prevention of dengue disease in individuals aged 4-60," Takeda Biopharmaceuticals India said in a statement. QDENGA is the first dengue vaccine approved in India and can be administered to individuals irrespective of previous dengue exposure, without requiring pre-vaccination testing, the company said.

Dengue continues to pose a major public health challenge in India, with thousands of cases reported every year. According to National Vector Borne Disease Control data, 6,927 cases and 10 deaths had been reported till February this year. The disease is endemic across most parts of the country, which accounts for nearly one-third of the global dengue burden. According to the company, the vaccine is effective against all four dengue virus serotypes.

"The latest seven-year data for QDENGA show continued protection against dengue infection and hospitalisation across all four serotypes; an important milestone for communities and health systems. Since its launch in 2022, QDENGA has been approved in 43 countries, with more than 32 million doses distributed globally," said Mahender Nayak, head of intercontinental markets at Takeda.

Dengue is a year-round public health challenge with no specific treatment. Its severe form, dengue haemorrhagic fever, can be life-threatening. Goh Choo Beng, medical affairs head, South-east Asia and India Cluster, said, "India carries a substantial dengue burden, and all four dengue virus serotypes have been documented as co-circulating in several regions. QDENGA is designed to protect against all four serotypes, regardless of prior exposure. Its approval represents an important step in strengthening India's comprehensive approach to dengue prevention, alongside vector control, surveillance, community awareness and other public health measures." The approval is based on findings from Takeda's global clinical development programme comprising 19 Phase I, II and III clinical trials involving more than 28,000 participants across dengue-endemic and non-endemic regions. The programme included the pivotal Phase III TIDES (DEN-301) trial, which evaluated the vaccine in more than 20,000 participants across eight countries over an extended period to assess its long-term safety and efficacy.

Printed by, Sri Simmha Enterprises, Published by M.APROSE, onbehalf of M.APROSE, printed at THIRUVALLUR, and Published at ,1, THATTANKAADU 4TH STREET, KONGU VELAAN NAGAR, VTC PERIYASEMUR, PO: PERIA SEMUR, ERODE, TAMIL NADU - 638004 ,Editor HARI KRISHNAN M.